மதுரையில் உள்ள ஐஸ்வர்யம் அறக்கட்டளைக்கு 2024-ம் ஆண்டுக்கான சிறந்த நிறுவனத்துக்கான முதலமைச்சர் விருதை சென்னையில் நேற்று முன்தினம் நடந்த சுதந்திர தின விழாவில் அறக்கட்டளையின் தலைவரும், நேத்ராவதி வலி நிவாரண மையத்தின் நிர்வாக அறங்காவலருமான டாக்டர் ஆர்.பாலகுருசாமிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

கல்வி நிலையங்களில் சுதந்திர தின விழா

தேனி/மதுரை

ஆண்டிபட்டி அருகே முத்தனம்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் நடந்த சுதந்திர தின விழாவில் மகாராஜன் எம்எல்ஏ தேசியக் கொடியேற்றினார்.

தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் முதல்வர் (பொறுப்பு) ஆர்.விஜய் ஆனந்த் தேசியக் கொடியேற்றினார். உத்தம பாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரியில் நடந்த விழாவில் தாளாளர் எம்.தர்வேஷ் முகைதீன், ஆட்சிமன்ற குழு தலைவர் எஸ்.முகமது மீரான், முதல்வர் ஹெச்.முகமது மீரான் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னாள் பேராசிரியர் எ.அப்பாஸ் மந்திரி கொடியேற்றினார்.

மதுரை கீழச்சந்தைப்பேட்டை டாக்டர் டி.திருஞானம் தொடக்கப் பள்ளியில் பள்ளித் தலைவர் வி.சுரேந்திரன் பாபு தலைமையில் தலைமையாசிரியர் க.சரவணன் கொடியேற்றினார். தனக்கன்குளம் அரசு கள்ளர் உயர் நிலைப்பள்ளியில் நடந்த விழாவுக்கு தலைமை ஆசிரியர் நவநீதகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

மதுரை கோமதிபுரம் தென்றல் நகர் குடியிருப்போர் சங்கம் சார்பில் நடந்த சுதந்திர தின விழாவில் செயற்குழு உறுப்பினர் சி.பன்னீர் செல்வம் தேசியக் கொடியை ஏற்றினார்.

தேனியில் மருத்துவர்கள் மவுன ஊர்வலம்

ஆண்டிபட்டி

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மவுன ஊர்வலம் நடைபெற்றது.

கருப்பு பட்டை அணிந்து நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் இதில் கலந்து கொண்டனர். மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தேசிய மருத்துவர் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றவும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆண்டிபட்டியில் இன்று மின்தடை

ஆண்டிபட்டி

ஆண்டிபட்டி துணை மின் நிலையத்தில் இன்று (ஆக.17)) மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளன.

இன்று காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஆண்டிபட்டி, டி.சுப்புலாபுரம், ராஜகோபாலன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, ஏத்தக்கோவில், ராஜதானி, பாலக்கோம்பை ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என்று மின்வாரியம் அறிவித்துள்ளது.

மேயர் இல்லாமல் அதிகாரிகளுடன் எம்.பி. ஆய்வுக்கூட்டம்

மதுரை திமுகவில் சலசலப்பு

மதுரை

மேயர் இந்திராணி இல்லாமல், மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் எம்.பி. சு.வெங்கடேசன், ஆணையர் மற்றும் அதிகாரிகளை அழைத்து ஆய்வுக்கூட்டம் நடத்தியது மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள், அக்கட்சியின் மாநகர நிர்வாகிகளிடையே சலசலப்பை உருவாக்கி உள்ளது.

கடந்த 8 முதல் 11-ம் தேதி வரை 'மாமதுரை விழா' கொண்டாடப்பட்டது. இந்த விழாவை சு.வெங்கடேசன் எம்.பி. தலைமையில், மாநகராட்சியுடன் இணைந்து 'யங் இந்தியன்ஸ்' அமைப்பு நடத்தியது. அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டனர்.

இப்படி விழாக்கள் எடுத்தால் மட்டும் போதாது, அடிப்படை சாலை கட்டமைப்பு இல்லாத மதுரையை மேம்படுத்த மக்கள் பிரதிநிதிகள் என்ன நடவடிக்கை எடுத்தனர்? என சு.வெங்கடேசனுக்கும், உள்ளூர் அமைச்சர்களுக்கும் கேள்வி எழுப்பி, பொதுமக்களும், பிற அரசியல் கட்சியினரும் கடந்த 2 நாட்களாக சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர். பலர் சேதமடைந்த சாலைகளின் புகைப்படங்களையும், வீடியோக்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

இதையடுத்து, சாலைகளை சீரமைக்க வலியுறுத்தி நேற்று மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமாரிடம் சு.வெங்கடேசன் மனு அளித்தார். பின்னர், ஆணையர், மாநகராட்சி பொறியியல் துறை அதிகாரிகளை அழைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தினார். ஆனால், மேயர் இந்திராணி இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

மேயர் இல்லாமல் ஆணையர், அதிகாரிகளை அழைத்து சு.வெங்கடேசன் ஆய்வுக்கூட்டம் நடத்தியது, திமுக கவுன்சிலர்கள் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியது.

ஆய்வுக் கூட்டத்துக்குப் பின்னர் சு.வெங்கடேசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதுரையின் சாலைகள் மிக பெரிய அளவில் பாதிப்படைந்துள்ளன. சமூக வலைதங்களில் பலரும் அதை கவனப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

சாலைகளை செப்பனிடுவது தொடர்பாக மாநகராட்சி ஆணையருடன் துணை மேயர், மார்க்சிஸ்ட் கவுன்சிலர்கள், நிர்வாகிகள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் நடந்தது. 34 சாலைகளை அதிகபட்சம் 10 நாட்களில் சரி செய்வதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

மாநகராட்சியில் தற்போது சில பாலங்கள், சாலைப் பணிகள் நடக்கின்றன.

இதுபோன்ற சமயங்களில் சிறிது சிரமங்கள் இருக்கத்தான் செய்யும். மாவட்ட, மாநகராட்சி நிர்வாகங்கள், தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆகியோர் அடங்கிய கூட்டு ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும். நகராட்சித் துறை அமைச்சர் மதுரை மாநகராட்சி சாலைகளை ஆய்வு செய்ய வேண்டும்" என்று கூறினார்.

மேயர் இல்லாமல் ஆய்வுக் கூட்டம் நடத்தியது பற்றி கேட்ட போது, "நான் நிர்வாக ரீதியாக அதிகாரிகளை மட்டுமே சந்திக்க வந்தேன். மக்கள் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க அதிகாரிகளிடம் ஆலோசித்தேன்" என்றார்.

இதுகுறித்து மேயர் இந்திராணியிடம் கேட்டபோது, 'எம்.பி. அதிகாரிகளை மட்டுமே சந்திக்க வந்தார்.

என்னை சந்திக்க வரவில்லை. சேதமடைந்த சாலைகளை நானும், அதிகாரிகளும் ஏற்கெனவே ஆய்வு செய்து விட்டோம்.

தற்போது 35 சாலைகளை சீரமைக்கும் பணிகள் நடக்கின்றன. மேலும், சிறப்பு நிதி கேட்டு தமிழக அரசுக்கு திட்ட மதிப்பீடு அனுப்பியுள்ளோம். சு.வெங்கடேசன் எம்.பி. பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் நடந்த போது நான் அலுவலகத்தில் இல்லாததால் அதில் பங்கேற்க வில்லை' என்று கூறினார்.

மேயர் இல்லாமல் ஆணையர் மற்றும் அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டம் நடத்திய சு.வெங்கடேசன் எம்.பி.

படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

வயநாடு நிலச்சரிவை, பெரியாறு அணையுடன் தொடர்புபடுத்துவதை கண்டிக்க வேண்டும்

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்

மதுரை

முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்டுவதற்காக, கேரள வயநாடு நிலச்சரிவையும், முல்லைப் பெரியாறு அணையையும் தொடர்புபடுத்துவதை தமிழக அரசு கண்டிக்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தினர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், ஆட்சியர் சங்கீதா தலைமையில் நடந்தது.

இதில் கேரளாவில் ஏற்பட்ட வயநாடு நிலச்சரிவை, முல்லைப் பெரியாறு அணையுடன் தொடர்புபடுத்தி அம்மாநிலத்தில் பொய்யான தகவல்களை அரசும், அரசியல் கட்சிகளும் பரப்பி வருகின்றன. முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்ட கேரளா அரசு திட்டமிடுகிறது. இதற்கு தமிழக அரசு கடும் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும். அதற்கு, இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் சார்பில் கண்டன தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என, ஒட்டுமொத்தமாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர் சங்கீதா, இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற முடியாது. விவசாயிகள் கோரிக்கை மனுக்களாக அளித்தால் அரசின் கவனத்துக்கு கொண்டுசெல்வோம் என்றார்.

விவசாயி எம்.பி.ராமன்: 5 மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரமான முல்லைப் பெரியாறு அணையை பாதுகாக்க தமிழக அரசு அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

பழனிச்சாமி: முல்லைப் பெரியாறு, வைகை அணையிலிருந்து உரிய முறைப்படி தண்ணீர் திறக்க வேண்டும். இப்போதே அணையிலிருந்து தண்ணீர் திறந்தால், விவசாயப் பணிகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

ஆட்சியர்: தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டுசென்று, அணையில் தண்ணீர் வரத்து, இருப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டும், விவசாயிகளோடு கலந்தாலோசனை செய்தும் விரைவில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கொடைக்கானலில் சேவை கற்றல் நிகழ்ச்சி

கொடைக்கானல்

அகில இந்திய கிறிஸ்தவ உயர் கல்வி சங்கம் புதுடில்லி மற்றும் மதுரை அமெரிக்கன் கல்லூரி இணைந்து கொடைக்கானலில் சமூக சேவை மற்றும் சேவை கற்றல் திட்டம் குறித்த நிகழ்ச்சி நடந்தது.

சங்க பொதுச்செயலாளர் சேவியர் வேதம் வரவேற்றார். முன்னதாக, ஆசியா யூனிடெட் போர்டு கிறிஸ்தவ கல்வி இயக்குநர் மகேர் ஸ்பர்ஜன் வழிபாட்டுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

கொடைக்கானல் செண்பகனூர் திருஇருதய கல்லூரி தலைவர் ஜோசப் ஆன்டனிசாமி, கொடைக்கானல் நகரத்தை உருவாக்கியதில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு குறித்து விளக்கினார்.

அகில இந்திய கிறிஸ்தவ உயர் கல்வி சங்க தலைவர் மற்றும் அமெரிக்கன் கல்லூரியின் முதல்வர் எம்.தவமணி கிறிஸ்டோபர் பேசினார். நாளை (ஆக.18) வரை நடைபெற உள்ள நிகழ்ச்சியில் 7 வகையான கலந்துரையாடல்கள் பல்வேறு திறனாய்வாளர்களால் நடத்தப்பட உள்ளது.

கொடைக்கானலில் அகில இந்திய கிறிஸ்தவ உயர் கல்வி சங்கம் சார்பில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய சங்க தலைவர் எம்.தவமணி கிறிஸ்டோபர்.

மர நாயை வேட்டையாடியவர் கைது

ஒட்டன்சத்திரம்

ஒட்டன்சத்திரத்தில் மர நாயை வேட்டையாடிய வழக்கில் மேலும் ஒருவரை வனத்துறையினர் கைது செய்தனர்.

ஒட்டன்சத்திரம் வனச்சரகத்துக்கு உட்பட்ட பூதமலை பகுதியில் வன விலங்குகளை சிலர் வேட்டையாடுவதாக ஆக.8-ம் தேதி வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, வனச்சரக அலுவலர் ராஜா உத்தரவின் பேரில் வனவர் இளங்கோவன் தலைமையில் வனப் பணியாளர்கள் ரோந்து சென்றனர்.

அப்போது, செங்கரக்காடு என்ற இடத்தில் அழிவின் விளிம்பில் உள்ள மர நாயை வேட்டையாடி சமைத்து சாப்பிட்ட 7 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

மேலும், தப்பியோடிய இருவரை தேடி வந்தனர். இந்நிலையில் நேற்று கருவேலம்பட்டியை சேர்ந்த காளிமுத்து (24) என்பவரை போலீஸார் கைது செய்தனர்.

நகரில் நடப்பவை

மதுரை

- ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு குறள் ஒப்புவித்தல் போட்டி: தெய்வநெறிக் கழகம், தெற்காடி வீதி, மீனாட்சி அம்மன் கோயில், மாலை 5.
- ஆன்மிகச் சொற்பொழிவு: சகஸ்ரநாமம் கோஷ்டி, தலைப்பு- 108 திவ்யதேச வைபவம், பேசுபவர்- தென்திருப்பேரை அரவிந்த் லோச்சன சுவாமி, மதனகோபால சுவாமி கோயில், மேலமாசி வீதி, மாலை 6.30.
- ஆன்மிக இலக்கியப் பொழிவு, மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்காடி வீதி, இரவு 7.

V.O.CHIDAMBARANAR PORT AUTHORITY
CIVIL ENGINEERING DEPARTMENT, TUTICORIN - 628004
SAGARMALA
NOTICE INVITING TENDER

#	Name of the work	Estimated cost put to tender value (Amount in INR)	Cost of Earnest Money Deposit (EMD) (Amount in INR)	Online Tender opening date
1	Attending retrofitting works at Fixed Fire Fighting System (FFFS) and Construction additional dolphin for handling smaller vessels at oil jetty	8,68,45,905	17,37,000	30.08.2024

Note: For eligible tenderers, downloading of bid documents from the NIC e-tendering website
i) https://etenders.gov.in/eprocure/app
ii) https://www.vocport.gov.in
Sd/-
Chief Engineer
VOCPA

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்).

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
242513 002722	5000 MT ± 5% அலுவலகக்கழிவு காகிதத்தை (வெள்ளை பதிவுகள்) தமிழ்நாட்டிலிருந்து காகிதபுரத்தில் உள்ள TNPL Unit - I க்கு பேல் வடிவில் கொள்முதல் செய்தல்	27.08.2024
242513 002766	திருவாளர் சக்தி சுகர்ஸ் லிமிடெட். ஆப்பக்கூடல் ஆலையிலிருந்து TNPL காகிதபுரம் ஆலைக்கு கரும்புச் சக்கைகள் / எரிபொருள் (நிலக்கரி / கச்சா லிக்னைட்) போக்குவரத்து மூலம் எடுத்து வருதல் / கொண்டு செல்லுதல்.	30.08.2024
242513 002755	தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்கள். பல்கலைகழகங்கள். பாலிடெக்னிக் கல்லூரிகள். பள்ளிகள் அரசு அச்சகங்கள். பொது துறை நிறுவனங்களில் உள்ள காலாவதியான விடைத்தாள்கள் / புத்தகங்கள் / வெள்ளைதாள்கள் / பத்திரிக்கை வெட்டுக்கள் முதலியவற்றை சேகரித்தல், ஏற்றுதல் மற்றும் காகிதபுரத்தில் உள்ள TNPL ஆலைக்கு போக்குவரத்து செய்தல்.	28.08.2024
இமெயில்	242513002722, 2755 - purchase.recycle@tnpl.co.in 242513002766 - purchase.trans@tnpl.co.in	

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/3035/ஒப்பந்தப்புள்ளி/2024 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

மீதமுள்ள பங்குதாரர்களின் கவனத்திற்கு வெளியேறும் சலுவை பொது அறிவிப்பு
ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்
(ஓர் இந்திய அரசு நிறுவனம்) CIN: L25111UP1972GOI003599
1வது தளம், 3/481, விகல்ப் காண்ட், கோம்தி நகர், லக்னோ, UP 226010, இந்தியா. Tel.No. 0522-3119593
Email : csscootersindia@gmail.com, Website : www.scootersindialimited.com

இந்த வெளியேறும் சலுகை பொது அறிவிப்பானது, **("வெளியேறும் சலுவை PA")** விதிமுறை 26 மற்றும் SEBI **(ஈக்விட்டி பங்குகளை நீக்குதல்)** விதிமுறைகள், 2021-ன் பொருந்தக்கூடிய பிற விதிகள் மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் மூலம் அவ்வப்போது SEBI வழங்கிய விதிவிலக்குகளில் உள்ளபடி, இந்திய அரசு, கனரக தொழில்துறை அமைச்சகம், புது டெல்லி, நிறுவனத்தின் ஊக்குவிப்பாளர், நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு, தற்போது திரு. நவின் கவுல் **("கையகப்படுத்துபவர்")** மீதமுள்ள பொது பங்குதாரர்களுக்கு **("மீதமுள்ள பங்குதாரர்கள்")** ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்டின் **("நிறுவனம்")** பங்குச் சந்தையிலிருந்து அதாவது பிஸ்இ லிமிடெட் **("பிஎஸ்இ")**-லிருந்து தலா ரூ.10/- முகமதிப்பு கொண்ட **("ஈக்விட்டி பங்குகள்")** நிறுவனத்தின் முழுமையாக செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குகளை தானாக முன்வந்து நீக்குவது தொடர்பாக. இந்த வெளியேறும் சலுவை PA, மே 03, 2023 தேதியிட்ட ஆரம்ப பொது அறிவிப்புக்கு **("IPA")**, டிசம்பர் 08, 2023 அன்று வெளியிடப்பட்ட டிசம்பர் 06, 2023 தேதியிட்ட பொது அறிவிப்பு மற்றும் டிசம்பர் 09, 2023 **("PA")** மற்றும் டிசம்பர் 20, 2023 தேதியிட்ட சலுகைக் கடிதம் **("சலுவை கடிதம்")** தொடர்ச்சியாக உள்ளது. இந்த விளம்பரத்தில் வரையறுக்கப்படாத விதிமுறைகள் IPA, PA மற்றும் சலுவை கடிதம் ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள ஒரே அர்த்தங்களை கொண்டிருக்கும்.

பிஎஸ்இ அதன் அறிவிப்பு எண். 20240605-51, நாள் ஜூன் 05, 2024 அன்று நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளில் வர்த்தகம் செய்வது (ஸ்கிரிப் குறியீடு : 505141) அதாவது 12.06.2024 முதல் நிறுத்தப்பட்டது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஸ்கிரிப் ஜூன் 20, 2024 முதல் பிஎஸ்இ-லிருந்து நீக்கப்பட்டது.

பட்டியலிருந்து நீக்கிய சலுகைக்கு பிறகு தொடர்நது ஈக்விட்டிப் பங்குகளை வைத்திருக்கும் மீதமுள்ள பங்குதாரர்கள் 20.06.2024 முதல் 19.06.2026 வரை அல்லது SEBI-ஆல் அனுமதிக்கப்படும் தேதி **("வெளியேறும் விண்டோ")** வரை ஒரு ஈக்விட்டி பங்கிற்கு **("வெளியேறும் விலை")** ரூ.31.78/- என்ற விலையில் தங்கள் ஈக்விட்டி பங்குகளை வாங்குபவருக்கு டெண்டர் செய்ய முடியும். மீதமுள்ள பங்குதார்களுக்கு **("வெளியீட்டு கடிதம்")** வெளியேறும் விண்ணப்பத்துடன் சலுகையின் வெளியேறும் கடிதம் அனுப்பப்படுகிறது.

மீதமுள்ள பங்குதாரர்கள் தங்கள் வெளியேறும் விண்ணப்பத்தை எந்த தாமதமும் இல்லாமல் தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவும். வெளியேறும் விண்ணப்பப் படிவம் கையகப்படுத்துவரால் பெறப்பட்டு, தொடர்புடைய காலண்டர் மாதத்தின் முடிவில் இருந்து 10 வேலை நாட்களுக்குள், கையகப்படுத்துபவர் மாதாந்திர அடிப்படையில் பணம் செலுத்துவார் என்பதை நினைவில் கொள்ளவும் **("மாதாந்திர கட்டணம் சுழற்சி")**. ஆகஸ்ட் 31, 2024 முதல் 10 வேலை நாட்களுக்குள் முதல் மாதாந்திர கட்டணம் சுழற்சி முறையில் செய்யப்படும்.

வெளியேறும் கடிதம் கிடைக்காத பட்சத்தில் அல்லது ஏதேனும் கூடுதல் விவரங்கள் அல்லது வினவலுக்கு, நீங்கள் பதிவாளருக்கு எழுதலாம் அல்லது நிறுவனத்தின் www.scootersindialimited.com என்ற இணையதளத்தில் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மேலாளர்/பதிவாளர் இணையதளத்தில் இருந்து அதன் நகலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வெளியேறும் சலுகைக்கான மேலாளர்
Corporate Professionals
கார்ப்பரேட் புரேப்பசனல் கேப்பிடல் பிரைவேட் லிமிடெட்
டி-28, தெற்கு விரிவு பகுதி-1, புது டில்லி - 110049, இந்தியா
தொடர்பு நபர் : திருமதி.அஞ்சலி அகர்வால்,
போன்: 011-40622230/40622209 **Email:** mb@indiacp.com;
இணையதளம்: www.corporateprofessionals.com
SEBI பதிவு எண்.: INM000011435
வெலிடிட்டி காலம் : நிரந்தரம்
நிறுவன அடையாள எண்: U74899DL2000PTC104508

வெளியேறும் சலுகைக்கான பதிவாளர்
Skyline Financial Services Pvt.Ltd.
ஸ்கைலிங் பைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
டி-153-ஏ, 1வது தளம், ஓக்லா இன்டஸ்டிரியல் ஏரியா, பேஸ்-1, புது டில்லி - 110020, இந்தியா.
தொடர்பு நபர் : திரு.பவன் சிங் பிஷ்,
போன்: 011-26812682/83 & 64732681 to 88
Email: admin@skylinerta.com **Website** : www.skylinerta.com
SEBI பதிவு எண்.: INR000003241 **வெலிடிட்டி காலம் :** நிரந்தரம்
நிறுவன அடையாள எண்: U74899DL1995PTC071324

இடம் : லக்னோ
நாள் : 17.08.2024
கையகப்படுத்துவர்க்காக மற்றும் சார்பாகவும்
Sd/-
நவின் கவுல்
(அங்கீகரிக்கப்பட்ட கையொப்பாளர்)

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, மஞ்சள்மேட்டு காலனி, நாகு நகர், மதுரை-625016

இ-ஏல விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழக்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1.	1660210180000017 1. தனசேகரன்.R, S/o.Mr.ராஜூ 2. Mrs.D.தீபா W/o.Mr.தனசேகரன்.R	(i) 26.11.2021 (ii) 25.11.2021 அன்றுள்ளபடி ₹ 16,86,389/- (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பத்தாறாயிரத்து முன்னூற்று எண்பத்தொன்பது மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 16.07.2022 & நேரடி சுவாதீனம் - 08.01.2024	26.07.2024 அன்றுள்ளபடி ₹ 19,75,730/- (ரூபாய் பத்தொண்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்)	₹ 15,04,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து நான்காயிரம் மட்டும்)	₹ 1,50,400/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்து நானூறு மட்டும்)
2.	1660210170000064 1. Mr.செல்வம்.M, 2. Mrs.சகுந்தலா.S	(i) 12.07.2021 (ii) 11.07.2021 அன்றுள்ளபடி ₹ 12,79,753/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 29.01.2022 & நேரடி சுவாதீனம் - 20.02.2024	22.07.2024 அன்றுள்ளபடி ₹ 25,30,160/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து முப்பதாயிரத்து நூற்று அறுபது மட்டும்)	₹ 15,08,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து எட்டாயிரம் மட்டும்)	₹ 1,58,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து எட்டாயிரம் மட்டும்)

சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், சிந்துபட்டி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட சர்வே எண்.319/ 9C2, பட்டா எண்.2032 **திடியன் கிராமம், T.உச்சபட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்** என்னும் முகவரியில் **பரப்பு 0.01.0 ஹெக்டேர் இதில் 904½ சதுர அடி காலி நிலம், அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம்,** கதவு எண். 1/260, சொத்து வரி மதிப்பீடு எண்.286 மற்றும் பெயர்சிட்டுகள் மற்றும் இதர வசதிகள், அதனுடன் அனைத்து வழிப்பாதை உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 33 ½ அடி மற்றும் தெற்கு திசையில் 33 ½ அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 27 அடி மற்றும் மேற்கு திசையில் 27 அடி, மொத்தம் 904½ சதுர அடி. எல்லைகள்: வடக்கு : கருப்பதேவர்-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: பம்மியாபெரியகருப்பதேவர்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: வடக்கு தெற்கு தெரு, தெற்கு: நாகலட்சுமி-க்கு சொந்தமான சொத்து.

சொத்து விவரம் : பெரியகுளம் பதிவு மாவட்டம், ஏழுமலை சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட சர்வே எண்.48/3, பட்டா எண்.1078, **ஜோதிநாயக்கனூர் கிராமம், உசிலம்பட்டி தாலுகா, ஜோதிநாயக்கனூர் பஞ்சாயத்து, மதுரை மாவட்டம்** என்னும் முகவரியில் **0.10.0 ஹெக்டேர் அதற்கு சமமாக 25 சென்டு இதில் வடகிழக்கு பக்கமாக உள்ள 2222 சதுர அடி நிலம் மற்றும் வீட்டு கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 51 அடி, தெற்கு திசையில் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு திசையில் 44 ½ அடி மற்றும் மேற்கு திசையில் 43 ½ அடி, மொத்தம் 2222 சதுர அடி, அதற்கு சமமாக 206.43 சதுர மீட்டர் நிலம் இதில் கட்டப்பட்டுள்ள வீட்டு கட்டிடம், கதவு எண்.1/220, சொத்துவரி மதிப்பீட்டு எண்.808 மற்றும் மற்ற வசதிகள் பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: ஸ்கூல்-க்கு வடக்கு, 15 அடி வடக்கு-தெற்கு பொதுவழிப் பாதை-க்கு கிழக்கு, குழந்தைகள் நல காப்பகத்திற்கு சொந்தமான சொத்துக்கு மேற்கு, செந்தில்குமார்-க்கு சொந்தமான சொத்து தெற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 20.09.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 19.09.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	18.09.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன் - Mob: 81470 01897 / Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - Mob: 94455 08743 / Mr.R.புஷ்பகாந்த் - Mob: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட